# பாடம் 51: பேறுநிறை கன்னி மரியா

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**

| | |
|---|---|
| அடிப்படை நிலை (9 வயது) | : 1-3, 7-9, 13-15, 20-22 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| இடைப்பட்ட நிலை (12 வயது) | : 1 முதல் 23, 28 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| மேம்பட்ட நிலை (15 வயது) | : 1 முதல் 28 கருத்துகளைக் கற்பிக்கவும் |

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**
முந்திய பாடத்தில், தங்களது தூய வாழ்வால் நமது விசுவாசத்துக்குத் தூண்டுதலாக இருக்கின்ற கடவுளின் புனிதர்கள் மற்றும் வானதூதர்கள் மீதான பக்தி குறித்து நாம் கற்றோம். நமது அன்றாட வாழ்வில் அவர்களோடு எப்படி இணைந்திருக்க வேண்டும் என்பதையும் கற்றோம். இன்று, புனிதர்களின் நடுவே மிகப் பெரியவராகக் கருதப்படுகிற ஒருவரைக் குறித்து நாம் கற்போம், அதாவது, நமது அன்னை மரியா.

**தற்போதைய பாடம்:**
1. கத்தோலிக்கர்கள் என்ற முறையில் மரியாவைக் குறித்து நாம் நம்ப வேண்டுமென்று கத்தோலிக்கத் திருச்சபை போதிக்கும் நான்கு விடயங்கள் இருக்கின்றன.
அ) அவர் கடவுளின் தாயாக இருக்கிறார் (*தியோடோக்கோஸ்*);
ஆ) அவர் தமது வாழ்நாளில் எப்பொழுதும் கன்னியாக இருந்தார் (முப்பொழுதும் கன்னி);
இ) அவர் தொடக்கப் பாவத்தின் கறையின்றிக் கருவானார் (அமல உற்பவம்);
ஈ) தமது மண்ணக வாழ்வின் முடிவில் உடலோடும் ஆன்மாவோடும் விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார் (விண்ணேற்பு).

2. **மரியா, கடவுளின் தாய் (*தியோடோக்கோஸ்*).** இந்த மெய்கோள் கடவுளான இயேசுவை மரியா கருத்தாங்கியதில் இருந்து, அவர் கடவுளின் தாயாக இருக்கிறார் என்று கற்பிக்கிறது.

3. மரியா கடவுளின் தாயாக இருக்கிறார் என்று மறைநூல் நமக்கு காட்டுகிறது. ஆனால் அதற்கு முன்பாக, இயேசு உண்மையில் கடவுளாக இருக்கிறார் என்ற உண்மைக்கான விவிலியச் சுட்டல்களை நாம் அடையாளம் காண வேண்டும்.

அ) பவுல் கொலோசையருக்கு எழுதியத் திருமுகங்களில் நாம் அத்தகையச் சுட்டல்களைக் காணலாம்.

*கொலோசையர் 1:19*: ‘‘அவரில் (இயேசு) கடவுளின் முழுநிறைவும் குடிகொள்ள விரும்பினார்.’’

*கொலோசையர் 2:9*: ‘‘அவரில் (இயேசு) இறைமையின் முழுநிறைவும் உடலளவில் குடிகொண்டுள்ளது.’’

கடவுளின் முழுநிறைவும் இயேசுவில் குடிகொள்ள விரும்பினார் என்று கூறும்போது, இயேசுவில் தந்தை, மகன் மற்றும் தூய ஆவியார் முழுமையாகக் குடிகொண்டனர் என்று பொருளாகிறது. இந்த இரண்டு விவிலியப் பகுதிகளும் இயேசு முழுமையாக மனிதாக இருந்த வேளையில், முழுமையாக கடவுளாகவும் இருந்தார் என்பதை உறுதி செய்கின்றன. இயேசுவில் இரண்டு இயல்புகள் இருக்கின்றன, இறை இயல்பு மற்றும் மனித இயல்பு.

ஆ) யோவான் எழுதிய இரண்டாம் திருமுகத்தில், நாம் வாசிக்கிறோம்: ‘‘ஏமாற்றுவோர் பலர் உலகில் அலைந்து திரிகின்றனர், இயேசு கிறிஸ்து உடலெடுத்து வந்தவர் என்பதை அவர்கள் ஒப்புக்கொள்வதில்லை; அத்தகைய நபர் எவரும் ஏமாற்றுபவர் மற்றும் எதிர்க்கிறிஸ்துவாக இருக்கிறார்’’ (2யோவா 7).

‘‘இயேசு’’ (அல்லது எபிரேயத்தில் *யெசுவ்*) என்ற பெயருக்கு ‘‘யாவே மீட்பாய் இருக்கிறார்’’ அல்லது எளியப் பதத்தில், ‘‘கடவுள் மீட்கிறார்’’ என்பது பொருள். ‘‘கிறிஸ்து’’ என்பதற்கு ‘‘திருப்பொழிவு பெற்றவர்’’ என்று பொருள். ‘‘இயேசு கிறிஸ்து’’ என்ற முழுப்பெயருக்கு ‘‘திருப்பொழிவு பெற்றவர், யாவே மீட்பாய் இருக்கிறார்’’ என்பது பொருள். ‘‘யாவே’’ என்பது பழைய ஏற்பாட்டில் கடவுளுக்கு வழங்கப்பட்டுள்ளப் பெயர்களில் ஒன்றாகும். திருப்பொழிவு

பெற்றவர், மனிதகுலத்தை மீட்க யாவே (கடவுள்) உடலெடுத்து வந்தார் என யோவானின் இரண்டாம் திருமுகம் கூறுகிறது.

இயேசு கிறிஸ்து திருப்பொழிவு பெற்றவர், உடலெடுத்து வந்த மீட்பரான யாவேயை (பொருள்: "மீட்பரான கடவுளை") புறக்கணிக்கும் எவரும், ஏமாற்றுபவராகவும் எதிர்க் கிறிஸ்துவாகவும் இருக்கிறார் என்றும் யோவானின் இரண்டாம் திருமுகம் கூறுகிறது.

இ) இயேசுவின் இறைமையை உறுதி செய்யும் மற்றொரு விவிலியப் பகுதி யோவான் நற்செய்தியில் காணப்படுகிறது, அது கூறுகிறது, "தொடக்கத்தில் வாக்கு இருந்தது, அது கடவுளோடு இருந்தது, அது கடவுளாகவும் இருந்தது" (யோவா 1:1).

ஈ) எந்த ஐயமுமின்றி இயேசுவின் இறைமையை உறுதி செய்துவிட்டதால், மரியா கடவுளின் தாயாக இருக்கிறார் என்பதைத் தெளிவாகக் கூறும் விவிலியப் பகுதிக்கு நாம் திரும்புகிறோம்.

லூக்கா 1:39-45: "அந்நாள்களில் மரியா புறப்பட்டு யூதேய மலை நாட்டிலுள்ள ஓர் ஊருக்கு விரைந்து சென்றார். அவர் செக்கரியாவின் வீட்டிற்குள் நுழைந்து எலிசபெத்தை வாழ்த்தினார். மரியாவின் வாழ்த்தை எலிசபெத்து கேட்ட பொழுது, அவர் கருப்பையில் இருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று. எலிசபெத்து தூய ஆவியார் நிரப்பப்பட்டவராய், உரத்தக் குரலில், 'பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர், உம் கருப்பையின் கனியும் ஆசிபெற்றதே! என் ஆண்டவரின் தாய் என்னிடம் வந்தது ஏன்? உம் வாழ்த்தொலியை நான் கேட்ட உடனே, என் கருப்பையில் உள்ள குழந்தை பேருவகையால் துள்ளிற்று. ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்' என்றார்."

எலிசபெத்து தூய ஆவியால் நிரப்பப்பட்டவராய், "என் ஆண்டவரின் தாய்" என்ற பொழுது, மரியா கடவுளின் தாயாக இருந்தார் என்னும் தெளிவான பொருளிலேயே அவர் கூறினார். எலிசபெத்து வழியாக, தூய ஆவியாரே இவ்வுண்மையை மனிதகுலத்துக்கு வெளிப்படுத்தினார்.

4. கத்தோலிக்கத் திருச்சபையின் விசுவாசிகள், அதன் பிறப்பின் நாள்களில் இருந்து, மரியா கடவுளின் தாயாக இருந்ததை எப்பொழுதும் நம்பி வந்துள்ளனர் என்பதை திருமரபு நமக்கு வெளிப்படுத்துகிறது. திருச்சபையின் முதல் நூற்றாண்டுகளில் இந்த நம்பிக்கை இருந்ததன் காரணமாகவே, எபேசு பொதுச் சங்கம் (கி.பி. 431) 'கடவுளின் தாய்' என்ற மரியாவின் மெய்கோளைப் பறைசாற்றியது. இத்தகைய ஒரு பறைசாற்றல் புதிய கோட்பாட்டை ஏற்றுக் கொள்வதில்லை, மாறாக கிறிஸ்தவர்களின் பொது நம்பிக்கையை உறுதிசெய்கிறது.

5. திருச்சபை தந்தையர்களும் மரியாவின் தாய்மை குறித்து இதையே உறுதி செய்துள்ளனர்:

இரனேயுஸ், *திரிபுரைகளுக்கு எதிராக*, 5:19:1 (கி.பி. 189): "கன்னி மரியா, அவர் கடவுளைக் கருத்தாங்குவார் என்ற வானதூதரிடம் இருந்து பெற்ற மகிழ்ச்சி அலைகளுக்கு, அவரது வார்த்தைக்குக் கீழ்ப்படிந்திருந்தார்."

அலெக்சாந்திரியாவின் பேதுரு, *அலெக்சாந்திரியாவின் பேதுருவின் உண்மை பணிகள்* (கி.பி. 305): "அவர்கள் கடவுளின் மிகப் பேறுநிறை தாயும், என்றும் கன்னியுமான மரியாவின் ஆலயத்திற்கு வந்தனர், நாங்கள் பேசத் தொடங்கவே, மறைச்சாட்சிகளின் கல்லறைக்காக, துணைநகரில், அவர் மேற்கு காற்பகுதியில் கட்டிக் கொண்டிருந்தார்."

*எகிப்தியரல்லாத எல்லா ஆயர்களுக்கான மடல்* 12 (கி.பி. 324): "இறந்தோரின் உயிர்ப்பை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம், அவர்களில் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவே முதலானவர்; அவர் தோற்றத்தில் அன்றி, கடவுளின் தாயான மரியாவிடம் இருந்து பெற்ற ஒரு உடலைக் கொண்டிருந்தார்."

மிலானின் அம்புரோஸ், *கன்னியர்கள்* 2:2(7) (கி.பி. 377): "கற்றலில் ஆழ்விருப்பைத் தூண்டும் முதல் விடயம் ஆசிரியரினட பெருமையே. கடவுளின் தாயை விடப் பெரியது என்ன? மாட்சியானவரே தேர்ந்தெடுத்த அவரை விட மாட்சியுள்ளது என்ன?"

6. *கதிம 495*: "'இயேசுவின் தாய்' என்று நற்செய்திகளில் அழைக்கப்படும் மரியா, தமது மகனின் பிறப்புக்கு முன்பே, தூய ஆவியின் தூண்டுதலால் 'என் ஆண்டவரின் தாய்' என்று எலிசபெத்தால் அழைக்கப்படுகிறார். உண்மையில், தூய ஆவியால் ஒரு மனிதராக அவர் கருத்தாங்கியவர், ஊனுக்குரிய முறையில் உண்மையில் அவரது மகனானவர், தந்தையின் நித்திய மகனாகிய, தூய திரித்துவத்தின் இரண்டாம் ஆளைத் தவிர வேறெவரும் இல்லை. ஆகவே மரியா உண்மையில் 'கடவுளின் தாய்' (தியோடோக்கோஸ்) என்று திருச்சபை ஒப்புக்கொள்கிறது.''

7. **மரியாவின் நிலைத்தக் கன்னிமை.** மரியா தமது வாழ்நாள் முழுவதும் ஒரு கன்னியாக இருந்தார் மற்றும் இயேசுவின் பிறப்புக்குப் பிறகும் அவர் யோசேப்போடு ஒருபோதும் பாலுறவு கொள்ளவில்லை, ஆகவே வேறெந்த பிள்ளைகளையும் கொண்டிருக்கவில்லை என்று இந்த மெய்கோள் கூறுகிறது.

8. கிறிஸ்து பிறப்பின் அறிவிப்பு குறித்து லூக்கா 1:26-38ல் வாசிக்கவும். கன்னி மரியாவிடம் அவர் மெசியாவின் தாயாகப் போகிறார் என்று அதிதூதர் கபிரியேல் கூறியதும், அவர் ஓர் எளிய கேள்வியால் பதிலிறுத்தார்: "இது எப்படி ஆகும்? ஏனெனில் நான் எந்த மனிதரோடும் உறவில் இல்லையே.'' மரியா தாம் கருவுற்று ஒரு மகனைச் சுமப்பார் என்பது குறித்து ஐயமுறவில்லை, ஆனால் கருவுறும் விதத்தை அவரால் புரிந்துகொள்ள இயலவில்லை. மரியா கூறியதன் நேரடி மொழிபெயர்ப்பு: "ஏனெனில் நான் மனிதரை அறியேனே'' (எப்பெய் ஆந்த்ர வூ கினோஸ்கோ). "ஏனெனில் நான் இன்னும் ஒரு மனிதரை அறிந்திருக்கவில்லை'' என்று மரியா கடந்தகாலத்தில் பேசவில்லை. மாறாக, அவர் நிகழ்காலச் சுட்டைப் பயன்படுத்துகிறார்: "ஏனெனில் நான் மனிதரை அறியேனே.'' அவர் வெறுமனே தாம் கன்னியாக இருக்கிறதை மட்டும் உறுதி செய்யவில்லை, ஆனால் தாம் தொடர்ந்து ஒரு கன்னியாக இருக்க விரும்புவதையும் அவர் சுட்டிக் காட்டுகிறார். இதுதான் மரியாவைக் குழப்புகிறது: அதாவது அவர் ஒரு கன்னியாக இருந்தார் மேலும் அவ்வாறு தொடர்ந்திருக்க விரும்பினார், ஆயினும் அவர் கருவுற்று ஒரு மகனைப் பெற்றெடுப்பார் என்று வானதூதர் கூறினார்.

மரியா ஏற்கெனவே புனித யோசேப்போடு திருமண ஒப்பந்தமாகி இருந்தார் (காண். லூக் 1:27) – மரியா இன்னும் அவரது வீட்டுக்கு வந்திருக்கவில்லை, ஆனால் அவர் விரைவில் அவ்வாறு செய்ய வேண்டும் (காண். மத் 1:18,24). பேறுநிறை கன்னி மரியா யோசேப்போடு பாலுறவு கொண்டிருக்க விரும்பி இருந்திருந்தால் – திருமண வாழ்வின் வழக்கத்திற்கு ஏற்ப – அவர் வானதூதரின் சொற்களால் குழப்பமுற்றிருக்க மாட்டார், ஏனெனில் வானதூதர் கபிரியேல் வாக்களித்த மகன் யோசேப்புடனான தமது பாலுறவில் பிறப்பான் என்று இயல்பாக எண்ணி இருந்திருப்பார். ஆனால் இங்கு, யோசேப்புடனோ அல்லது வேறு எந்த மனிதருடனோ பாலுறவு கொள்ளும் விருப்பம் தமக்கு இல்லாததால், அவர் புதிருக்கு உள்ளாகிறார். (அக்காலத்தில் மணத்துறவு உறுதியேற்பு சில இஸ்ரயேல் குழுக்களிடையே பொதுவாக இருந்தது.)

9. நிலைத்தக் கன்னிமை கோட்பாட்டைக் காட்டும் மற்றொரு பத்தியாக சிலுவையில் இயேசு கூறியவை அமைகின்றன, அதாவது முதலில் தமது தாயிடம் "பெண்ணே, இதோ உன் மகன்!'' என்றும் பிறகு தமது சீடரிம் "இதோ, உன் தாய்!'' என்றும் யோவான் 19:26-27ல் கொடுத்த கட்டளைகள். யோவான் நற்செய்தி பின்னர் கூறுகிறது, "அந்நேரம் முதல் அச்சீடர் அவரைத் தமது வீட்டில் ஏற்றுக் கொண்டார்''.

திருச்சபை தந்தையரின் காலத்தில் இருந்தே இக்கூற்றுக்கு, இயேசுவின் இறப்புக்குப் பிறகு மரியாவைப் பார்த்துக்கொள்ள குடும்பத்தில் வேறு எவரும் இல்லாததாலும், மரியாவுக்கு வேறு பிள்ளைகள் இல்லாததாலும் அவர் சீடரிடம் ஒப்படைக்கப்பட்டார் என காரணம் கூறப்படுகிறது.

10. ஆகவே, தொடக்க கிறிஸ்தவர்களில் இருந்தே, மரியா தமது வாழ்நாள் முழுவதும் தமது கன்னிமையைத் தக்கவைத்திருந்தார் மேலும் யோசேப்போடு சேர்ந்து எந்த பிள்ளைகளையும் ஒருபோதும் கொண்டிருக்கவில்லை என திருச்சபை எப்பொழுதும் நம்பி வந்துள்ளது.

அத்தனாசியுஸ் (அலெக்சாந்திரியா, கி.பி. 293-373);
எப்பிபானியுஸ் (பாலஸ்தீன், கி.பி. 315-403);
எரோனிமுஸ் (ஸ்திரிதோன், தற்போது யுகோஸ்லாவியா, கி.பி. 345-419);
அகுஸ்தீன் (நுமீதியா, தற்போது அல்ஜீரியா, கி.பி. 354-430);

சிரில் (அலெக்சாந்திரியா, கி.பி. 376-444);

11. 2ம் கொன்தாந்திநோபிள் சங்கம் (கி.பி. 553-554) மரியாவை ''என்றும் கன்னி'' என இருமுறை சுட்டியது.

12. மரியாவின் நிலைத்தக் கன்னிமை பற்றி குறிப்பிட்ட பகுதிகளில் சில ஐயங்கள் இருக்கின்றன. பல வாதங்கள் நிலவுகின்றன:

அ) மறைநூல் அவ்வப்போது இயேசுவின் ''சகோதரர்கள்'' மற்றும் ''சகோதரிகள்'' பற்றி பேசுகிறது (மாற் 3:3, 6:3; மத் 13:55-56).

முதலாவதாக, இயேசுவின் இந்த ''சகோதர சகோதரிகள்'' மரியாவின் பிள்ளைகள் என்று விவிலியம் கூறவில்லை என்பதைக் கவனிப்பது முக்கியமானது.

இரண்டாவதாக, சகோதரர் (சகோதரி) என்பதற்கான கிரேக்கச் சொல்லான அதெல்போஸ் (அதெல்பா) என்பது, சகோதரர், சகோதரி அல்லது நெருங்கிய உறவினரைக் குறிக்கிறது. இயேசு மற்றும் அவரது சீடர்களின் பேச்சு மொழியான அரமேயத்திலும், மற்ற செமித்திய மொழிகளிலும் குருதி உடன்பிறப்பு மற்றும் உறவினரை வேறுபடுத்தும் சொல் இல்லை. ஆகவே, இயேசுவின் உறவினரான திருமுழுக்கு யோவான் (மரியாவின் உறவினரான எலிசபெத்தின் மகன்), இயேசுவின் ''சகோதரர்'' (அதெல்போஸ்) என அழைக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆ) *மரியா இயேசுவைப் பெற்றெடுக்கும் வரை* யோசேப்பு அவரோடு பாலுறவு கொள்ளவில்லை என மறைநூல் கூறுகிறது (மத் 1:25), ஆனால் இயேசுவைப் பெற்றெடுத்தப் பிறகு அவர் பாலுறவு கொண்டார் என்பதையே இது உறுதி செய்கிறது.

''அவர் (மரியா) தம் மகனைப் பெற்றெடுக்கும் வரை, முன்பு எந்நேரமும் (ஹெயோஸ்) அவர் (யோசேப்பு) அவரோடு உறவு கொள்ளவில்லை, அவருக்கு இயேசு என்று அவர் பெயரிட்டார்'' என்று மத்தேயு நற்செய்தி குறிப்பிடுவதில் பயன்படுத்தப்படும் ஹெயோஸ் என்றச் சொல், குறிப்பிட்ட நேரத்துக்குப் பிறகு என்ன நடந்தது என்பது பற்றி எதையும் குறிக்கவில்லை. ஹெயோஸ் என்ற சொல்லின் கிரேக்க மற்றும் செமித்திய மொழிப் பயன்பாடு, யோசேப்பும் மரியாவும் பாலுறவு கொண்டிருந்தனர் அல்லது இயேசுவுக்குப் பிறகு வேறு பிள்ளைகளைக் கொண்டிருந்தனர் என்பதைக் குறிக்க அவசியமில்லை.

இ) மரியா இயேசுவைத் தமது முதற்பேறாகப் பெற்றெடுத்தார் என்று மறைநூல் கூறுகிறது (லூக் 2:7), இது முதற்பேறுக்குப் பிறகு மற்றப் பிள்ளைகள் இருந்ததைக் குறிக்கிறது.

லூக்கா நற்செய்தியில் இயேசுவுடனான மரியாவின் உறவுநிலையைச் சுட்ட அவருக்குச் சாற்றப்படும் *ப்ரோட்டோடோக்கோஸ்* (''முதற்பேறு'') என்றச் சொல், மரியா வேறு பிள்ளைகளை கொண்டிருந்தார் என்பதைக் குறிக்கவில்லை. ''முதற்பேறு'' என்றப் பதம் மோசே சட்டத்தின் கீழ் ஒரு சட்டம்சார் பதமாகும் (விப 6:14), அது யூதப் பெற்றோருக்கு வேறு பிள்ளைகள் பிறந்தாலும் இல்லாவிட்டாலும் முதலில் பிறந்த ஆண் குழந்தையைச் சுட்டுகிறது.

13. **மரியாவின் அமல உற்பவம்**. மரியா கடவுளின் அருளாலும் நேர்த்தியானத் திட்டத்தாலும் தொடக்கப் பாவத்தின் கறையில் இருந்து பாதுகாக்கப்பட்டார் என்பதே இந்த மெய்கோள்.

அமல உற்பவக் கோட்பாடு அலுவல்சார் விதத்தில் திருத்தந்தை 9ம் பயஸால் 1854ல் வரையறுக்கப்பட்டது. கன்னி மரியாவிடம் மிகுந்த பக்தி கொண்டிருந்த 9ம் பயஸ், இந்த வரையறை மரியா மீதான மற்றவர்களின் பக்திக்குத் தூண்டுதலாக இருக்கும் என நம்பினார்.

14. இந்த மெய்கோள் பல மக்கள் தவறாக வரையறுக்கப்படுகிறது. இந்த பதம் மரியாவின் கருப்பையில் மனிதத் தந்தையின் தலையீடின்றி கிறிஸ்து கருவானதைச் சுட்டுவதாக சில மக்கள் நினைக்கின்றனர்; அதற்கான சரியானப் பெயர் 'கன்னிப் பிறப்பு' என்பதாகும். அமல உற்பவம் என்பது மரியா தாமே இயேசுவைப் போன்று ''தூய ஆவியின் வல்லமையால்'' கருவானதைக் குறிப்பதாக மற்றவர்கள் நினைக்கின்றனர், ஆனால் இது அதுவும் அன்று.

15. அமல உற்பவம் என்றால், மரியாவின் கருவாதல் சாதாரண வழியில் நிகழ்ந்தது, அவர் தமது தாயின் கருப்பையிலேயே தொடக்கப் பாவத்தின் கறையின்றி கருவானார் என்பது பொருளாகும். தொடக்கப் பாவத்தின் சாரம் புனிதப்படுத்தும் அருளின் குறைபாட்டில் உள்ளது. மரியா இந்த குறைபாட்டில் இருந்து பாதுகாக்கப்பட்டார்; அவரது இருப்பின் முதல் தருணத்தில் இருந்தே அவர் புனிதப்படுத்தும் அருளின் நிலைக்குள் இருந்தார்.

16. கிறிஸ்து பிறப்பின் அறிவிப்பின்போது மரியாவை கபிரியேல், ''அருள் நிறைந்தவரே வாழ்க, ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்'' என கூறி வாழ்த்தினார் (லூக் 1:28). ''அருள் நிறைந்தவர்'' என்றச் சொற்றொடரானது *கெக்காரிதோமெனே* என்ற கிரேக்கப் பதத்தின் மொழிபெயர்ப்பாகும். இச்சொல் உண்மையில் வானதூதர் குறிப்பிடும் நபரின் இயற்பெயரைச் சுட்டுகிறது, மேலும் இவ்விதமாக அது மரியாவின் பண்பின் தரத்தை வெளிக்காட்டுகிறது.

''அருள் நிறைந்தவர்'' என்ற மரபுசார் மொழிபெயர்ப்பு, அண்மை மொழிபெயர்ப்பில் காணப்படும் ''அருள் மிகப் பெற்றவர்'' என்பதை விட மிகத் துல்லியமானதாக இருக்கிறது. மரியா கடவுளின் அருளை மிகப்பெற்ற மகளாக இருக்கிறார் என்பது உண்மை, ஆனால் கிரேக்கம் அதைவிட மேலானதைக் குறிக்கிறது. புதிய மொழிபெயர்ப்புகள் கிரேக்கம் சொல்ல வருவதை தவிர்த்துள்ளன, இந்த அருள் (*கெக்காரிதோமெனே* என்பதன் மையமாக இருக்கிற *காரிஸ்*) நிலையானதும் தனித்த வகையானதுமாக இருக்கிறது.

கிரேக்கமானது அருளின் நேர்த்தியைச் சுட்டிக்காட்டுகிறது. இந்த நேர்த்தி உள்நோக்கியதாக மட்டுமின்றி வெளிநோக்கியதாகவும் இருக்க வேண்டும். மரியா அனுபவித்த அருள் தரப்பட்ட நேரத்தில் மட்டும் ''நிறைவாக'' அல்லது வலுவாக அல்லது முழுமையாக இருப்பதன்றி, கருவாதலில் இருந்து அவரது வாழ்நாள் முழுவதும் நீடித்திருந்திருக்க வேண்டும். அதாவது, ''அருள் நிறைந்தவர்'' என்று அழைக்கப்பட அவர் தமது இருப்பின் முதல் கணத்தில் இருந்து புனிதப்படுத்தும் அருளின் நிலையில் இருந்திருக்க வேண்டும். அவர் வெறுமனே ''அருள் மிகப்பெற்றவராக'' இருந்தால், இந்த சொற்களின் சாதாரணப் பொருளில், அவரது நிலையை விவிலியத்தில் உள்ள வேறு சில பெண்களிடம் இருந்து வேறுபடுத்த முடியாததாக இருக்கும்.

17. மரியாவின் அமல உற்பவம் பற்றி சில பகுதிகளில் சில ஐயங்கள் இருக்கின்றன. மரியா வெறுமனே ஒரு படைப்புயிரியே என்பதால், ''எல்லாரும் பாவம் செய்துள்ளோம்'' (உரோ 3:23) என்று நமக்கு கூறப்பட்டுள்ளது. அதைத் தாண்டி, ''என் ஆன்மா என் மீட்பராம் கடவுளில் பேருவகை கொள்கிறது'' என்று மரியா கூறுகிறார் (லூக் 1:47), ஒரு பாவிக்கு மட்டுமே ஒரு மீட்பர் தேவைப்படுகிறார்.

மரியாவுக்கு ஒரு மீட்பர் தேவை என்பதில் ஐயங்கொள்ள முடியாது. ஆதாமின் மற்றெல்லா வழிமரபினரைப் போன்று, மரியாவும் தமது இயல்பில் தொடக்கப் பாவத்திற்கு ஆளாகியிருக்க வேண்டியிருந்தது. ஆனால் கடவுளின் சிறப்பு குறுக்கீட்டால், அவர் கருவானக் கணத்திலேயே, அவர் தொடக்கப் பாவத்தின் கறையில் இருந்தும் அதன் விளைவுகளில் இருந்தும் பாதுகாக்கப்பட்டார். அவர் உண்மையில் கிறிஸ்துவின் அருளால் மீட்கப்பட்டார், ஆனால் ஒரு சிறப்பான விதத்தில், முன்னதாகவே. இந்த கோட்பாடு லூக்கா 1:47க்கு முரணானது அன்று.

''எல்லாரும் பாவம் செய்துள்ளோம்'' என்ற உரோமையர் 3:23ன் கூற்று, மனிதகுலம் முழுவதை சுட்டும் பொதுவானக் கூற்று. புனித பவுல் தமது கூற்றில் மரியாவைப் பற்றி பேசவில்லை. அவரது பொதுவானக் கூற்று, சிறப்பு நோக்கத்துக்காக மரியா விலக்கப்பட முடியாது என்று பொருள் தரவில்லை.

18. அமல உற்பவ மெய்கோள் மரியா தம்மைப் பற்றி அவர் விவரிப்பதற்கே முரண்படுகிறது என்று சிலர் கூறுகின்றனர்: ''அவர் தமது அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார்'' (லூக் 1:48). மரியா உயர்ந்த படைப்புயிரியாக இருந்தால் அவர் எப்படி தாழ்நிலையில் இருக்க முடியும்? அவர் தம்மைத் தாழ்நிலையில் இருக்கிறவராகப் புரிந்து கொண்டால், அவர் தம்மைப் பாவம் செய்தவராகப் புரிந்துகொண்டார் என்பது பொருளாகாதா?

பாவம் மட்டும் தாழ்நிலைக்கு காரணமில்லை. கடவுளை ஒப்பிடும்போது, எந்த படைப்புயிரியும், எவ்வளவு நேர்த்தியாக இருந்தாலும், மரியா உள்பட, தாழ்நிலையில் இருக்கின்றது. தம்மை தாழ்நிலையில் இருக்கிறவராகக் குறிப்பிடுவது ஒருவரின் தாழ்ச்சியைக் காட்டுகிறது, இதுவே

மரியாவின் விடயத்திலும் உண்மையாக இருக்கிறது, இந்த வகிநிலைக்கு மரியாவை ஏன் கடவுள் தேர்ந்தெடுத்தார் என்பதற்கு துல்லியமான காரணம் இதுவே.

19. மரியாவை நாம் மிக உயர்ந்தவராகக் கருதினாலும், அவரை மீட்க கடவுளின் அருள் தேவையில்லை என்பது அதன் பொருளாகாது. மரியா தொடர்பாகத் திருச்சபை போதிக்கின்ற மெய்யாக அனைத்திற்கும் அடிப்படையை வழங்கும் மையமான, ஒருங்கிணைந்த கருத்தமைவு ஒன்று கத்தோலிக்க திருச்சபையில் இருக்கிறது. காலங்கள் தோறும் தமது திட்டத்தில் சிறப்பு பங்காற்றுவதற்கான மக்களை கடவுள் தேர்ந்தெடுக்கிறார்: ஆபிரகாம் ஒரு சிறப்பு வகிநிலை கொண்டிருந்தார், மோசே ஒரு சிறப்பு வகிநிலை கொண்டிருந்தார், தாவீது ஒரு சிறப்பு வகிநிலை கொண்டிருந்தார், மேலும் கிறிஸ்து எல்லாவற்றிலும் மிகச் சிறந்த ஒரு வகிநிலை கொண்டிருந்தார். இதில் கிறிஸ்துவைத் தவிர, இந்த மக்களில் ஒவ்வொருவரும் தங்களது சிறப்பு வகிநிலையை கடவுளின் அருள் செயலால் பெற்றனர். கடவுளின் அருளுக்கு அப்பால், ஆபிரகாம் அல்லது மோசே அல்லது தாவீதைப் பற்றிச் சிறப்பானது எதுவுமில்லை. அவர்கள் கடவுள் தங்களுக்கு வழங்கிய அருளின் காரணமாக மட்டுமே சிறந்த மனிதராக இருந்தனர், சிறப்பு வகிநிலை கொண்டிருந்தனர். அது மரியாவுக்கும் பொருந்தும். மரியாவைக் குறித்த சிறப்பு அனைத்தும், கடவுளின் திட்டத்தில் அவரது இடமும் கடவுளின் அருளில் இருந்து வருகிறது. லூக்கா நற்செய்தியில் உள்ள வானதூதர் கபிரியேலின் சொற்களில் “அருள் நிறைந்த மரியே வாழ்க” என்று செபிக்கும் பொழுது, நாம் கூறுவது இதைத்தானே? மரியாவை குறித்த, அவரை மற்றும் கடவுளின் திட்டத்தில் அவரது இடத்தை உருவாக்குகிற அனைத்தும் நம்மில் இருந்து வேறுபடுவதற்கு காரணம் அவருக்கான கடவுளின் அருள் மட்டுமே. மரியா முழுவதும் கடவுளது அருளின் ஒரு விளைமமாக (விளைபொருளாக) இருக்கிறார்.

20. **மரியாவின் விண்ணேற்பு**. திருத்தந்தை 12ம் பயஸ், *முனிபிசெந்திசிமுஸ் தேயுஸ்* (1950) என்றத் திருத்தூதரிய விதியமைப்பில், மரியா “தமது மண்ணக வாழ்வை நிறைவுசெய்த பிறகு உடலோடும் ஆன்மாவோடும் விண்ணக மாட்சிக்குள் ஏற்கப்பட்டார்” என வரையறுத்தார்.

விண்ணேற்பானது மெய்யாக அமல உற்பவத்தின் விளைவு என்று 12ம் பயஸ் கூறினார்: “கடவுளின் தாய்க்கு வழங்கப்பட்ட இந்த இரண்டு தனித்தச் சலுகைகளும் அவரது மண்ணகப் பயணத்தின் தொடக்கத்திலும் முடிவிலும் மிக உயரிய ஒளியாகத் தனித்து நிற்கின்றன. அவரது கன்னி உடலுக்கு மிகச் சாத்தியமான மாட்சிப்படுத்தல் என்பது ஒருவேளை பொருத்தமான, வியத்தகு பரிசாக இருக்கிறது, அவரது ஆன்மாவின் முழுமையான மாசின்மை, அது எல்லா கறையில் இருந்தும் விடுபட்டிருந்தது. ... பாவம் மற்றும் அதன் வருத்தமான பின்விளைவுகள் மீதான கிறிஸ்துவின் மாட்சிமிகு வெற்றியை அவர் பகிர்ந்து கொண்டார்.”

21. எது விண்ணேற்பு இல்லை என்பதையும் மனதில் கொள்வது அவசியம். மரியா விண்ணகத்திற்கு ஏறிச்சென்றார் என்று கத்தோலிக்கர்கள் நம்புவதாக சில மக்கள் நினைக்கின்றனர். அது சரியன்று. கிறிஸ்து, தமது சொந்த வல்லமையால், விண்ணகத்திற்கு ஏறிச் சென்றார். மரியா விண்ணேற்பு அடைந்தார் அல்லது கடவுளால் விண்ணகத்திற்கு எடுக்கப்பட்டார். அவர் தமது சொந்த வல்லமையால் இதைச் செய்யவில்லை.

22. *முனிபிசெந்திசிமுஸ் தேயுஸில்* (1950), இந்த மெய்கோளுக்கு எழுச்சி தரும் பல விவிலியப் பத்திகளைத் திருத்தந்தை 12ம் பயஸ் மேற்கோள் காட்டியுள்ளார்:

*1 கொரிந்தியர் 15.* இந்த பத்தியில் பவுல் (முதன்மை சுட்டலான திருப்பாடல் 8:6 உடன் கூடுதலாக) தொடக்க நூல் 3:15ஐ குறிப்பிடுகிறார், பெண்ணின் வித்து தமது காலடியால் சாத்தானை நசுக்குவார் என்ற இறைவாக்கு அங்கு உரைக்கப்படுகிறது. இந்த இறைவாக்கை நிறைவேற்ற இயேசு விண்ணகத்திற்கு எழுந்து சென்றார், தொடர்ந்து பெண்ணும் அதையொத்த ஒரு முடிவைக் கொண்டுள்ளார், ஏனெனில் சாத்தானுடனான இந்த பகைமையை அவர் பகிர்ந்துள்ளார்.

*திருப்பாடல் 132.* இந்த திருப்பாடல் கடவுளின் பேழை எருசலேமுக்குத் திரும்பியதன் நினைவுகூரலாகவும், பின்னர் அதன் இழப்பிற்கான புலம்பலாகவும் இருக்கிறது. திருப்பாடலின் இரண்டாம் பாதி இந்த இழப்பு புதிய உடன்படிக்கையில் ஈடுகட்டப்படும் என்று கூறுகிறது, ஆகவே அது எதிர்நோக்கோடு செபிக்கிறது, “யாவே (ஆண்டவரே), நீர் உமது வலிமையின் பேழையோடு, உமது உறைவிடத்திற்கு உயரச் செல்வீராக” (வசனம் 8). திருச்சபை இந்த புதிய உடன்படிக்கைப் பேழையை மரியாவில் காண்கிறதால், அவர் ஆண்டவரைப் போன்று

அதே விதத்தில் – அதாவது, உடல் மற்றும் ஆன்மாவோடு – விண்ணகத்திற்கு எடுக்கப்பட்டார் என்று புரிந்து கொள்கிறது.

*திருவெளிப்பாடு 12:1-2.* "பத்மு தீவில் திருத்தூதர் யோவான் தியானித்த கதிரவனை ஆடையாக அணிந்திருந்த பெண்" பேறுநிறை கன்னி மரியாவே ஆவார்.

23. மரியாவின் விண்ணேற்புக்கு எதிர்மறை வரலாற்று எண்பிப்பு எனப்படும் சான்று இருக்கிறது. ("எதிர்மறை" என்பதன் பொருள் சான்றின்மையே ஒரு சான்றாக இருக்கிறது என்பதாகும்.) தொடக்க கிறிஸ்தவ நூற்றாண்டுகளில், புனிதர்களின் திருப்பண்டங்கள் பெருமையுடன் காக்கப்பட்டன, உயர் மதிப்பு பெற்றிருந்தன. (ரோமின்) கொலோசியத்தில் மறைச்சாட்சிகளாக இறந்தவர்களின் எலும்புகள், உடனடியாகச் சேகரித்துப் பாதுகாக்கப்பட்டன; விசுவாசத்திற்காக தங்கள் உயிரைக் கொடுத்தவர்கள் குறித்த இத்தகையப் பதிவுகள் வாழ்வு தொகுப்புகளில் காணப்படுகின்றன. ஆயினும் எல்லா புனிதர்களிலும் மிகுந்த தனிச்சலுகை பெற்றிருந்தவரும், உயர்ந்த புனிதருமான மரியாவின் திருப்பண்டங்கள் எங்கும் வணங்கப்பட்டதாக எந்த பதிவும் நம்மிடம் இல்லை.

24. மரியா திருச்சபையால் புதிய ஏவாள் என்று நம்பப்படுகிறார். ஏனெனில் ஏவாள் தம்மோடு ஒத்துழைத்த ஆதாமோடு சேர்ந்து கடவுளுக்கு கீழ்ப்படியாததால், அவர்கள் தங்களுக்கும் தங்கள் வழித்தோன்றல்களுக்கும் உரிய புனிதப்படுத்தும் அருளை இழந்தனர். ஏவாளைப் போன்று, மரியா அருள் நிறைந்தவராகப் படைக்கப்பட்டார். ஆனால் ஏவாளைப் போலன்றி, மரியா தொடர்ந்து கடவுளுக்கு கீழ்ப்படிந்திருந்தார், அவர் ஆதாமைப் போலன்றி, கடவுளுக்கு தொடர்ந்து கீழ்ப்படிந்த கிறிஸ்துவைப் போன்றிருந்தார். கடவுளோடு ஒத்துழைத்ததில், மரியா மீட்பரின் தாயானார், மேலும் கிறிஸ்துவோடு ஒத்துழைத்ததில், அவர் மீட்கப்பட்டவர்களுக்கும் தாயானார்.

மறைச்சாட்சி யுஸ்தீன், *யூதரான ட்ரைபோ உடனான உரையாடல்* (சுமார் கி.பி. 150): ஏவாள் இன்னும் கன்னியாக இருந்த பொழுதே அவர் வழியாகத் தீமை உலகில் நுழைந்தது; அவ்வாறே மரியா இன்னும் கன்னியாக இருந்த பொழுதே அவர் வழியாக மீட்பு உலகில் நுழைந்தது என்று விளக்குகிறார். இருவரும் அவர்கள் பங்கேற்றச் செயலில் விருப்பத்தோடு ஈடுபட்டனர். எவரும் உணர்வற்ற ஒரு கருவியாக இல்லை. ஏவாள் பாம்புக்குச் செவிசாய்த்து இறப்பைக் கருத் தாங்கினாள். மரியா வானதூதர் கபிரியேலுக்குச் செவிசாய்த்து வாழ்வைக் கருத்தாங்கினார்.

இரனேயுஸ், *திரிபுரைகளுக்கு எதிராக*, 3.22.4: மனிதகுல உடன்படிக்கையின் தலைவரான ஆதாமுடன் ஏவாள் ஒத்துழைத்தது போன்று, புதிய மனிதகுல உடன்படிக்கையின் தலைவரான இயேசு கிறிஸ்துவோடு மரியா ஒத்துழைத்தார் என்று இரனேயுஸ் கூறுகிறார். ஏவாள் "கீழ்ப்படியாமையால் தமது மற்றும் மனிதகுலம் முழுவதன் இறப்பின் காரணமானது போன்று, மரியாவும் ... கீழ்ப்படிதலால் தமது மற்றும் மனிதகுலம் முழுவதன் மீட்புக்கு காரணமானார்."

இரனேயுஸ், *திரிபுரைகளுக்கு எதிராக*, 35.19.1: "ஒரு கன்னியால் மனிதகுலம் இறப்புக்கு உட்பட்டது போன்று, ஒரு கன்னியால் அது விடுவிக்கப்பட்டது, கன்னியின் கீழ்ப்படியாமை கன்னியின் கீழ்ப்படிதலால் சமமாக்கப்பட்டது."

25. மரியா திருச்சபையின் மற்றும் திருச்சபையின் ஒவ்வொரு தனிப்பட்ட உறுப்பினரின் தாயாக இருக்கிறார். 1964ல், திருத்தந்தை 6ம் பவுல் பேறுநிறை கன்னி மரியாவை "திருச்சபையின் தாய்" என்று அறிவித்தார். எல்லா கிறிஸ்தவ மக்களும் அவரை நமது மிகுந்த அன்புள்ள தாய் என்று அழைக்கின்றனர் என்பது இதன் பொருளாகும். கடவுளின் தாய் கிறிஸ்தவ மக்கள் அனைவராலும் அன்புக்குரியப் பட்டங்களால் அழைக்கப்பட்டு, கூடுதலாக மதிப்பளிக்கப்பட வேண்டும் என்று திருச்சபை ஆணையிட்டுள்ளது.

ஹிப்போ புனித அகுஸ்தீன் (4ஆம் நூற்றாண்டு) கூறுகிறார், கிறிஸ்துவின் உறுப்புகளின் தாயாக மரியா இருக்கிறார், ஏனெனில் திருச்சபைக்குள் விசுவாசிகள் மறுபிறப்பெடுக்க அவர் பிறரன்பால் ஒத்துழைத்தார். திருத்தந்தை புனித பெரிய லியோ (5ஆம் நூற்றாண்டு) கூறுகிறார், தலையின் பிறப்பு உடலின் பிறப்பாகவும் இருக்கிறது. இந்த இரண்டு படிப்பினைகளும் ஒருசேர வைத்தால், கடவுளின் மகனான கிறிஸ்துவின் தாயாக மரியா இருக்கிற வேளையில், அவரது மறையுடலான திருச்சபையின் உறுப்பினர்களின் தாயாகவும் இருக்கிறதை நாம் காண்கிறோம்.

26. தூய ஆவியாரின் தூண்டுதலால், மரியா அறிவித்தார்: ‘‘எல்லா தலைமுறையினரும் என்னை பேறுபெற்றவள் என அழைப்பர்’’ (லூக் 1:48). இந்த சொற்கள் உலகெங்கும் அவரை அன்பு செய்யும் பல மில்லியன் கத்தோலிக்கர்களின் வடிவில் இன்று உண்மையாகியுள்ளது. கத்தோலிக்கர்கள் மரியாவை வழிபாடு அல்லது ஆராதனை செய்யவில்லை, ஆனால் நாம் அவரை மிக ஆழமாக வணங்குகிறோம். கத்தோலிக்கர்கள் அவரை சிறப்பு மரியாதைக்குரிய இடத்தில் வைத்துள்ளனர், மேலும் (செபமாலை போன்ற) சிறப்பு பக்திமுயற்சிகளால் அவரை வணங்குகின்றனர்.

வணங்குதல் என்பது மிக ஆழ்ந்த மரியாதை உணர்வுடன் ஒருவருக்கு மதிப்பளிப்பது ஆகும். வழிபாடும் ஆராதனையும் கடவுளுக்கு மட்டுமே உரியது, மரியா மற்றும் புனிதர்களுக்கான வணக்கமும் பக்தியும் அவர்களில் உள்ள கடவுளின் அருளைக் கண்டுணர்தலாக இருக்கிறது. மரியா அல்லது புனிதர்களிடம் நாம் செபிக்கும் பொழுது, நாம் அவர்களோடு செபிக்கிறோம் அல்லது கடவுளிடம் நமக்காக அவர்களின் பரிந்துரை செபத்தைக் கேட்கிறோம். மரியாவை நாம் வணங்குவதற்கு அவரில் உள்ள சிறப்பு அருளே காரணம். கிறிஸ்துவின் திருச்சபையில் நம்மை உறுப்பினர்களாக்கும் கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றியதில் அவரது தியாகங்கள் காரணமாகவும் நாம் அவரை வணங்குகிறோம். மரியா நம்மை மிகவும் அன்பு செய்கிறார், ஏனெனில் அவர் தமது மகன் இயேசு கிறிஸ்துவை அன்பு செய்கிறார்.

*கதிம 971*: ‘‘பேறுநிறை கன்னியிடமான திருச்சபையின் பக்தி கிறிஸ்தவ வழிபாட்டின் உள்ளியல்பாக இருக்கிறது. ‘‘பேறுநிறை கன்னிக்கு சிறப்பு பக்தியால்’’ திருச்சபை சரியாக மதிப்பளிக்கிறது. ‘‘மிகத் தொன்மை காலங்களில் இருந்தே பேறுநிறை கன்னி ‘கடவுளின் தாய்’ என்றப் பட்டத்தோடு மதிக்கப்படுகிறார், விசுவாசிகள் தங்களது எல்லா ஆபத்துகளிலும் தேவைகளிலும் அவரது பாதுகாப்பை நாடுகின்றனர். ...இந்த மிகச் சிறந்த பக்தி... உடலேற்ற வாக்கானவருக்கும், சமமாக தந்தைக்கும் தூய ஆவியாருக்கும் வழங்கப்படும் ஆராதனையில் இருந்து சாராம்சத்தில் வேறுபட்டது, மேலும் இந்த ஆராதனையைப் பெரிதும் வளர்க்கிறது.’’ கடவுளின் தாய்க்கு அர்ப்பணிக்கப்பட்ட திருவழிபாட்டு விழாக்களும் ‘‘நற்செய்தி முழுவதன் சுருக்கமான’’ செபமாலை போன்ற மரியாவின் செபங்களும், கன்னி மரியாவுக்கான இந்த பக்தியை வெளிப்படுத்துகின்றன.’’

27. குறிப்பிட்ட இடங்களில் குறிப்பிட்ட மக்களுக்கு ஒரு நோக்கத்திற்காக பேறுநிறை கன்னி மரியா தோன்றுவதற்கு கடவுள் அனுமதித்த காலங்கள் இருக்கின்றன. இந்த தோன்றுதல்கள் காட்சிகள் என்று அழைக்கப்படுகின்றன. இருபதாம் நூற்றாண்டு நமது பேறுநிறை அன்னையின் காட்சிகள் குறித்த அறிக்கைகளால் நிரப்பியுள்ளது. உலகில் உள்ள ஒவ்வொரு கண்டத்திலும் மரியாவின் காட்சிகள் நிகழ்ந்துள்ளன, எல்லா விதமான மக்களும் அவற்றைக் கண்டுள்ளனர்: ஆண்கள், பெண்கள், மற்றும் குழந்தைகள். இந்த காட்சிகளின் நிகழ்விடங்களும் எண்ணற்றவை: பெரும் நகர்கள், தொலைவான பகுதிகள், குகைகள், ஆலயங்கள், வயல்கள், வீடுகள், துறவுமடங்கள், மற்றும் வேறு இடங்கள்.

கூறப்படும் காட்சிகளை ஒப்புவதில், மறுப்பதில், அல்லது கண்டிப்பதில் திருச்சபை மிகுந்த முன்மதியோடு இருக்கிறது. ஒரு காட்சி குறித்து கவனமாக விசாரணை நடத்தப்பட்டு, ‘‘நம்பத் தகுந்ததன்று’’, ‘‘விசுவாசத்திற்கு முரணானதன்று’’, அல்லது ‘‘நம்பத் தகுந்தது’’ என்று அது வகைப்படுத்தப்படுகிறது. அலுவல்பூர்வமாக ஏற்கப்படும் காட்சி திருச்சபை படிப்பினைகளுக்கு முரணான செய்தியைக் கொண்டிருக்கக் கூடாது.

கூறப்படும் ஒரு காட்சியின் ஆய்வுக்காக, இந்த விடயத்தில் திருப்பீடத்தின் ஒப்புதல் பெறுவதற்காகச் சான்றுகளைத் திரட்டவும், விசாரிக்கவும், ஆய்வு செய்யவும், கண்டறிந்ததை அறிக்கையாக அளிக்கவும் தல ஆயர் ஒரு குழுவை நியமிக்க வேண்டும். அத்தகைய விசாரணைகள் எளிதானவை அன்று, அவை நேர்மறை முடிவை (அதாவது கூறப்படும் காட்சி அதிகாரப்பூர்வமானது மற்றும் அதனால் எழுந்த பக்தி அனுமதிக்கப்படும்) அல்லது எதிர்மறை முடிவை (அதாவது கூறப்படும் காட்சி அலகைக்குரியது அல்லது உண்மையற்றது மற்றும் அதனால் எழுந்த பக்தி தடை செய்யப்படும்) அல்லது தீர்மானிக்க முடியாததை (அதாவது கூறப்படும் காட்சியின் உண்மைத்தன்மை தெளிவற்றது மற்றும் அதனால் எழுந்த பக்தியை அனுமதிக்கலாம் அல்லது தடை செய்யலாம்) தரலாம்.

ஒரு குறிப்பிட்ட காட்சி குறித்து திருச்சபை எதிர்மறை முடிவெடுத்தால், நாம் அந்த காட்சியை நாம் நம்பக்கூடாது. ஒரு காட்சி குறித்து ஆயர் நேர்மறை முடிவெடுத்தால், நாம் அந்த காட்சிக்கு இசைவளிக்கக் கட்டுப்பட்டவர்கள் அல்லர், செல்லத்தக்கது என்று திருச்சபை அறிவித்தப் பிறகு நாம் அதைக் கண்டிக்கக்கூடாது. பெரும்பாலான நேரங்களில், கூறப்படும் காட்சிகள் மீது திருச்சபை நடவடிக்கையோ, இறுதி முடிவோ எடுப்பதில்லை. 20ஆம் நூற்றாண்டில் மட்டும் நூற்றுக்கணக்கானக் காட்சிகள் நிகழ்ந்ததாகக் கூறப்பட்டன, அவற்றில் மிகப் பெரும்பாலானவற்றுக்கு முடிவு வழங்கப்படவில்லை, பத்துக்கும் குறைவான காட்சிகள் மட்டுமே விசாரணை வழியாக அலுவல்பூர்வமாகக் கண்டுணரப்பட்டுள்ளன: பாத்திமா (போர்த்துகல்), பூராங் (பெல்ஜியம்), பனூ (பெல்ஜியம்), அகிட்டா (ஜப்பான்), சிரக்குஸ் (இத்தாலி), செய்த்தூன் (எகிப்து), மற்றும் பெத்தனியா (வெனிசுயேலா). இன்று உலகில் மிக நன்கறியப்பட்ட காட்சிகளில் ஒன்றாக பிரான்ஸ் நாட்டின் லூர்து நகரில் 1862ல் ஏற்கப்பட்டது ஆகும், பேறுநிறை அன்னை மீதான வலுவான பக்தியால் அங்கு தற்போது வரை ஒவ்வோர் ஆண்டும் மில்லியன் கணக்கான மக்கள் வருகின்றனர்.

28. மரியாவின் வாழ்வில் இருந்து நாம் மூன்று முக்கிய விடங்களைக் கற்கிறோம்.
அ) தாழ்ச்சி. கடவுளின் தாயாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வேளையிலும், மரியா தொடர்ந்து தாழ்ச்சியோடு இருந்தார், மேலும் தமது வாழ்நாள் முழுவதும் தமது மகனுக்கும் அவரது சீடர்களுக்கும் பணிபுரிய மிக விருப்பத்துடன் இருந்தார்.
ஆ) எளிமை. மரியா தமது கருவுறல் குறித்த வானதூதரின் சொற்களை ஏற்கும் அளவுக்கும், கடவுளின் திட்டம் தமது வாழ்வில் நிறைவேறும் என நம்பிக் கீழ்ப்படியும் அளவுக்கும் எளிய விசுவாசம் கொண்டிருந்தார்.
இ) பிறரன்பு. கடவுள் தமது விருப்பத்தை நிறைவேற்றப் போதுமான அளவுக்கு மரியா அவரை அன்பு செய்தார், மேலும் திருச்சபையின் தாய் என்றத் தமது வகிநிலையைத் தொடரப் போதுமான அளவுக்கு நம்மை அன்பு செய்கிறார். விண்ணக மாட்சியிலும் கூட, அவர் நமக்காகத் தொடர்ந்து பரிந்துபேசி, விண்ணகம் நோக்கிய நமது பாதையில் திருச்சபைக்குத் துணையிருக்கிறார்.